உ

ஓம் ஹரி நாராயண நமக



# ஓம் ஹரி ஸ்ரீ நாராயண கவசம்

அருட்கவி சி. விநாசித்தம்பி

உ

ஓம் ஹரி நாராயண நமக



# ஓம் ஹரி ஸ்ரீ நாராயண கவசம்

அருட்கவி சி. விநாசித்தம்பி

ஹரி ஓம் நமோ நாராயணாய நமக

# சங்கற்பம்

பேரன்பிற்குரிய மாயவனடியார்களே!

தற்போது உள்ள சூழ்நிலையில் மக்கள் இடம்பெயர்ந்தும் மற்றும் சொல்லணாத் துன்பங் களையும் அனுபவித்து வரும் இவ்வேளையில் அவர்களுடைய துன்பதுயரம், சிறைப்பயம், இன்னல்கள் யாவும் பொடிப்பொடியாகச் சிதறி நல்வாழ்வு பெற்று எல்லோரும் ஆனந்தமாக அன்பு மயமான வாழ்க்கை வாழ்ந்து எல்லாம் வல்ல அந்தப் பரம்பொருளின் திருவடிக் கமலங் களை பணிந்து மனதில் இருத்தி இந்நூலை வெளியிடுகின்றோம். இவற்றை தங்கள் கரங் களில் பெற்றவர்கள் பாக்கியசாலிகள். ஆகவே அவற்றைப் படித்து பாராயணம் செய்து மற்றவர் களுக்கும் கொடுத்து அவர்களுக்கும் கூறி இவற்றினால் ஏற்படும் நன்மைகளை எல்லோரும் அனுபவிக்க செய்வீர்கள் என வேண்டுகின்றேன்.

இன்பமே சூழ்க! எல்லோரும் இன்புற்று வாழ்க. அன்பே சிவம். தன்னுயிர் போல் மன்னுயிரையும் நேசி. மண்ணில் உள்ள எல்லா உயிர்களுக்கும் ஒரு தீங்கும் செய்யாமல் இருக்க இன்றைய நன்நாளில் (கிருஷ்ணஜெயந்தி) திடசங்கற்ப விரதத்தை அனுஷ்டிப்போமாக.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

கிருஷ்ண அடிமை
த. விஜயகுமார்.

இல. 30, கந்தர்மடம்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

# ஹரிகவசம்

## விநாயகர் வணக்கம்

ஹரிகவசஞ் சொல்லி யருண்மாலை சூட்டப்
பெருகுதமிழ் வெள்ளம் பெருகும்-ஒருகருணைச்
சொற்பரத்தி லுற்பவித்த சிற்பரத்தை யானைமுகக்
கற்பகத்தைக் கைதொழுதக் கால்.

நன்மையுஞ் செல்வமும் நாளு நல்குமே
தின்மையும் பாவமுஞ் சிதைந்து தேயுமே
சென்மு மரணமு மின்றித் தீருமே
இம்மையே ராமவென் றிரண்டெழுத்தினால்.

## திருமால் வணக்கம்

நாடிய பொருள்கை கூடும் ஞானமும் புகழும் உண்டாம்
வீடியல் வழிய தாக்கும் வேரியங் கமலைநோக்கும்
நீடிய வரக்கர் சேனை நீறுபட் டழிய வாகை
சூடிய சிலையி ராமன் தோள்வலி கூறு வோர்க்கே.

## இலக்குமி தோத்திரம்

உலகம் யாவையும் காத்தளித் தழிக்கின்ற வொருவன்
இலகு மார்பகத் திருந்துமெய் யன்புடன் னிற்கும்
அலகில் பல்லுயிர்க் கணங்களுக் கருட்கடை கொடுக்கும்
திலக வாணுதற் செந்திரு வடியிணை தொழுவாம்.

## ஹரிகவசம்

ஆதி யநாதி யநந்த பராபரம்
ஆதிமூல லந்தனி யற்புதப் பிரஹ்மம்
அரியெனு மந்திர மனுதின நினைபவர்
இருவினையெல்லா மெரிதுண லாய்விடும்
பரம குருபரம் பரமரு பதேசம்
அருமறை மொழியெலா மங்கே யுதித்திடும்
உலகம் பிறந்திட மோங்கார மாமிடம்
பலகலை தத்துவம் பலவுஞ் சமைந்திடம்
ஆதார மாறுமா யப்பால் வெளியுமாய் 5.
ஆதார மாறுக்கு மாதார மானதாய்
உச்சிமேல் வட்டமா யுயர்சுழி முனையதாய்ச்
சச்சிதா நந்தமாய்ச் சர்வஞ் சமானமாய்ப்
பஞ்சபூ தங்களாய்ப் பகலு மிரவுமாய்ப்
பஞ்சபூ, தங்களாய்ப் படைத்த பொருளுமாய்ப் 10.

மனமும் வெளியுமாய் மறப்புந் திறப்புமாய்த்
தினமுங் குணமுமாய்ச் சிவமுமாயது
இடைகலை பிங்கலை இருநான் கோர்கலை
நடுவணை சுழிமுனை நடிக்கு மோர்கலை
ஓரா யிரத்தினோ டோரா யிரங்கலை

பேரா யிரமுமாய்ப் பெருமை யொருமையாய்
ஐவரு ளைவரா யைவர்க் குறுதியாய்
கைவல்ய மான கமலா லயத்துனே
திருவா யுருவாய்த் தெளிவா யொளியாய்க்
குருவாய் வருவாய் கோலா கலமாய்

வானவர் முனிவர் மனோஹர மான
தீதை யாபரன் தெய்வ நாயகன்
தொண்டர்க் கெளிய தொண்டர்க் குரியவன்
புண்டரீ காட்சன் புராண புருடன்
கருணை மொழியோன் கருணை விழியோன்

இரண் வடிவமாய்க் கெதியும் பதியுமாய்
வைகுந் தத்தில் வாழும் பராபரன்
மெய்யென் பவர்க்குள் மெய்யா யிருப்பவன்
ஐம்பத்தோ ரட்சர மாக வணைத்தும்
இன்பத் துறையா யிருக்குஞ் சோதி

வண்ண நெடுமால் மலரடி சரணம்
கண்ணுளொளியே கண்ணே சரணம்
ஓரெட்டெழுத்த யுகந்தெனக் குதவும்
ஓரெட் டுருவே யொளியே சரணம்
தத்துதந் தொண்ணூற் றாறுக்கெட்டாத

தத்துவ முடிவே சரணஞ் சரணம்
ஆணும் பெண்ணும் அலியுமாய் நின்ற
தாணு வனச் சரணஞ் சரணம்
சரணமென் பவர்க்குட் டாண்டவ மாடும்
சரண கமலஞ் சரணஞ் சரணம்.

சிந்தையுள் நினைவாய்ச் சிந்திப்பவர்க்குத்
திந்திமி திமிதிமி திந்திமி திமியெனச்
செந்தரி செகணகு செந்தரி செயவென
மந்தி பூஷணர் மந்திர பாஷணர்
நாதகீ தத்துடன் நாதநா தாந்தமாய்

வேதகோ ஷங்களும் வேதசா ரங்களும்
முடியில் முடியு முகத்தா மரையும்
வடிவுள திருமண் மன்னிய வழகும்
இரவியு மதியு மிருதய னமுமால்
மருவிய குழையின் மகரகுண்டலமும்

சிறுநகை முகமுஞ் செவ்வாய் மொழியும்
கிருபை விளங்குங் கிரிடந் துலங்கக்
கண்ட சரங்களும் கண்டமா லிகையும்
கண்ட நிறைந்த கவுத்வபூ ஷணமும்
சதுர்ப்புஜத் தழுகுஞ் சங்குசக் கரமும்

பொதுப்பத நிறைந்த போதுகள் பதமும்
கிலோ மறுக்குங் கெதையும் குலுங்க
விலாச முடையோன் விலாச முடனே
சாமள மேனியுந் தகதக தகனெனக்
கோமளம் விளங்குங் சோலமுன் ஞாலும்

செந்திரு மார்புறை ஸ்ரீலக் குமியும்
சுந்தர முடைய துளசிமா லிகையும்
வாணியு மயனும் வளர்திரு வுந்தியும்
வாணியு மய்னும் வாழிநாள் மறையும்
பீதாம் பரத்தின் பிரகாசம் விளங்கப்

பாதாம் புயசெம் பதுமசிங் காரமும்
கலகல கலவெனக் காரண மின்ன
மலரடி மின்ன மாதவன் மின்ன
வெண்ணெயுண் டளித்த வெண்கர மின்ன
அண்ணல் திருமால் அடிமுடி மின்ன

வருக வருக மாயோன் வருக
அரியெட் டெடுத்தி லமர்ந்தோன் வருக
கண்ணன் கமலக் கண்ணன் வருக
மண்ணையுண் டருள்கார் வண்ணன் வருக.
விதுரன் கையில் வில்லை முறித்த

சதுரன் வடபாற் சயனன் வருக
பாண்டவர்க் காகப் பரிவுடன் தூதுசென்
றாண்டரு ளாதி மூலன் வருக
வருக வென்று மாமலர் தூவிக்
கருதி யழைக்கக் கருத்த திசைந்து

பட்சிவா களத்தில் பரிவுட னேறி
விஸ்தார நாமம் மிகுதியாய் விளங்க
வந்து வந்து மதுசூ தனனார்
சிந்தை தெளியத் தெரிசனங் காட்டிக்
கண்டு பணியக் காட்சியுந் தந்து

புண்டரீ காட்சன் புராண முடனே
வேதமுங் காட்டி விதியுங் காட்டி
வேதாத்தில் மெய்யுங் காட்டி
நாதமுங் காட்டி நயமுங் காட்டி
நாதாந் தத்தின் நடனமுங் காட்டி

நீயுங் காட்டி நானுங்காட்டி
நீயாய் நின்ற நிலையுங் காட்டி
இகமுங் காட்டிப் பரமுங் காட்டி
இகபர மில்லா விடமுங் காட்டி
உடலுங் காட்டி யுயிருங் காட்டி

உடற்கு முயிர்க்கு முறுநிலை காட்டித்
தானவ னான தத்துவங் காட்டி
மோன மனைத்து முறையாய்க் காட்டி
யோகங் காட்டி ஞானங் காட்டி
ஆகம மெல்லா மறியக் காட்டி,

ஆறா தாரந் தடுக்குங் காட்டி
வேறாய் நின்ற வேற்றுமை காட்டித்
தெளிவுங் காட்டி வெளியுங் காட்டி
அளவாய் நின்ற ஆநந்தங் காட்டி
ஆயுங் கலைக ளறுபத்து நான்கும்

பாயு மறையின் பயனுங் காட்டி
உள்ளுங் காட்டி புறமுங் காட்டி
உள்ளும் புறமு மொன்றாய்க் காட்டி
ஒன்றாய் நின்ற வுருவங் காட்டிப்
மனத்தினிலாடு மவுனங் காட்டி

பிறப்புங் காட்டி யிறப்புங் காட்டிப்
பிறப்பி னிறப்பின் பிரிவுங் காட்டிப்
பிறப்பிறப் பால்வரும் பிணியுங் காட்டிப்
பிறப்பிறப் பில்லாப் பேரின்பங் காட்டிச்
சத்துங் காட்டிச் சித்துங் காட்டி

நித்தம் பராபர நிலையுங் காட்டி
எல்லாங் காட்டி என்னுளங் காட்டி
எல்லாந் தானா யென்னு ளிருந்தே
எல்லாந் தானா மியல்பறி வித்தும்
எல்லா மொன்றா யினிப்பா யிருந்தும்

ஒரெட் டெழுத்தி னுற்பவ மெல்லாம்
ஒரெட் டெழுத்தா லுகந்தெனக் கருளி
அரிபதஞ் சேர வருள்தந் தருளி
இருவினை நீக்கி யிருளறப் போக்கித்
திருக்கம லத்தாள் தினந்தின மறவாய்

பரவசங் கொடுத்துப் பாலித்தருள்வாய்
சென்னி யைக்குல சேகரன் காக்க
வன்ன மயிறை மணவாளன் காக்க
நெற்றியை நெடுமால் நினைப்புடன் காக்க
சுற்றிப் புருவந் தூயோன் காக்க

நயன மிரண்டும் நன்மால் காக்க
தயங்கைம் பொறிதா மோதரன் காக்க
நாரணன் கேசவன் நாவினைக் காக்க
ஆரணன் வாக்கி லமர்ந்தே காக்க
தாடை மாதவன் சாலக் காக்க 135.

நெடிய விழிகளை நின்மலன் காக்க
செவிக ளிரண்டுந் திருவிக்ரமன் காக்க
புருவ முகங்களைப் புங்கவன் காக்க
கண்டங் கமலக் கண்ணன் காக்க
திரண்டிரு புயத்தைச் சீதரன் காக்க 140.

வாசு தேவன் மார்பினைக் காக்க
வீசும் பிடரி விராட்டோன் காக்க
நாபியைப் பதும நாபன் காக்க
தூவிடு வயிற்றைச் சோதியே காக்க
மூலத்தை யாதி மூலன் காக்க 145.

ஞாலத் திடரை நரசிங்கன் காக்க
இருகர மிருடி கேசவன் காக்க
அரிகம லத்தை யழகுடன் காக்க
துடையி ரண்டும்பரத் தூயவன் காக்க
நடைமுழுங் காண்மா நாயகன் காக்க

கணுக்கால் விரலைக் கவுத்துமன் காக்க
அணுக்கீழ் மேலாய் அகண்டமே காக்க
முன்னும் பின்னும் முகுந்தன் காக்க
நன்னடு வணைமறை நாதன் காக்க
உடலுயி ராவி யுத்தமன் காக்க

திடமுட னுருவஞ் சீதான் காக்க
சுழிமுனை யதனைத் துங்காமால் காக்க
எழில்சரு வாங்கமும் எம்பிரான் காக்க
காக்க வென்றவர் கருத்து ளிருந்து
காக்க நிதிமுங் காக்க காக்க.

எட்டுத் திசையு மிருந்தெனைக் காக்க
வட்டமிட் டணைத்து மகிழ்தே காக்க
கவசம் நினைக்கக் காலனைக் கடிய
கவச மணியக் கவசங் காக்க
குருவுப தேசக் குறியா லுரைத்த

அரிகவ சத்தை யாவ ரொருவர்
கற்றோர் கேட்டோர் கவச மணிந்தோர்
நித்தம் நினைந்தோர் நெஞ்சினில் வைத்தோர்
வானவர் நாடு ஞானமு மெய்தி
தானவ னாகிச் சாருவர் மோட்சமே.

ஹரி கவசம் முற்றிற்று.

# ஸ்ரீ நாராயணர் கவசம்

காப்பு (கணபதி)

எங்கு மாகி இருந்தவன் சங்கரன்
மங்க ளாம்பிகை மைந்தன் விநாயகன்
சங்கு சக்கரன் தழுவும் மருமகன்
துங்க வல்லபை துணைவனைப் போற்றுவாம்

நாராயணர்

செல்வ நாரணன் திருமக நாயகன்
சொல்வ ளந்தரு தோத்திரக் கீதையன்
வல்வி னைத்தொகை வஞ்சனை தீர்ப்பவன்
நல்வ ரக்குரு நாதனை யேத்துவாம்.

★

நாராய ணாய நமஎன்று நாச்செபிக்கத்
தீராத துன்பங்கள் தீருமே – வாராத
சக்திவரும் சித்திவரும் தத்துவஉற் பத்திவரும்
புத்திவரும் இன்பம் பொலிந்து.

## நூல்

பொன்னுயர் கோகு லத்துப்
புண்ணியா கண்ணா எங்கும்
மன்னிய உலக கோடி
வந்தளந் தெடுத்த வாமா
உன்னிய வடிவில் தோன்றி
உத்தமர் நெஞ்சி ருந்து
முன்னிய வரங்கொ டுக்கும்
முகுந்தனே போற்றி போற்றி.

மலைகளேழ் தீர்த்த மீரேழ்
வளந்தரு வேங்க டத்தின்
தலைவனார் மனத்தைக் காக்க
தாங்கிய சிகைசேர் சென்னி
வலவனார் காக்க யோகம்
வழங்குமுந் நாடி நெற்றி
நலமொ(டு) ஐவர்க்குத் தூது
நடந்தஅச் சுதனார் காக்க

செவிகளைத் திருமால் காக்க
திகழொளி விழியி ரண்டும்
குவலயம் புரக்க வந்த
கோவிந்த ராசன் காக்க
தவமுணர் நாசி தன்னைச்
சாரங்க பாணி காக்க
உவமனில் லாத வாயை
உமையவள் தமையன் காக்க.
எயிறுக ளிராமன் காக்க
இசைதரு நாவை வெண்ணெய்
நயமிகத் திருடும் கிருஷ்ணன்
நற்பதம் வைத்துக் காக்க
முயவுறும் அதரம் கன்னம்
மோகனக் குழலன் காக்க
செயல்புரி மூளை எல்லாம்
திரிவிக்ர மக்கோன் காக்க
பிடரியை ஆதி சேடப்
பெரும்பள்ளி கொள்வோன் காக்க
திடமிகு மண்டை என்பை
ஜெகசௌரி ராஜன் காக்க

மிடறொடு தொண்டை அண்ணம்
வித்துவக் கோட்டன் காக்க
தொடருறு முள்ளந் தண்டைத்
துவாரகை மன்னன் காக்க

பலனுயர் தோளி ரண்டும்
பரவைஆல் துயின்றோன் காக்க
பொலிதரு கையி ரண்டும்
புவிமகள் கணவன் காக்க
கலைதரு விரல்க ளெல்லாம்
கருடவா கனனார் காக்க
அலைவிலா மார்பெ லும்பை
ஆதிகே சவனார் காக்க

உதரமும் உணவு றுப்பும்
ஓங்கிய வராகன் காக்க
முதலுணர் குறியு றுப்பை
மோகினி யானான் காக்க.
பதிவுறு பிருட்டம் பாதம்
பக்தவத் சலனார் காக்க
குதம்மல சலக்கு ழாய்கள்
கோபியர் நாதன் காக்க

குரல்வளை கூர்மன் காக்க
கோலமார் கழுத்தெலும்பை
அருள்பல ராமன் காக்க
ஆறாத இருதயத்தை
புருஷோத் தமச்செங் கண்மால்
புஜங்கமேற் கிடந்து காக்க
வருசுவா சத்தொ குப்பை
மகரமீ னானால் காக்க

பழுவுடன் இடுப்பு மூலம்
பற்றிடு தொடைகள் கால்கள்
மழுவளை திகிரி ஏந்தும்
வரதார ஜேசுன் காக்க
மொழிமுழங் கால்மு ழங்கை
முன்வேக நதிக்கு றுக்கே
வழியடைத் துக்கி டந்த
மகாயதோக் தகாரி காக்க.

செவிடுகண் குருடு சித்தம்
செயற்படாத் தடுமாற் றங்கள்
கவலுடைக் கூனு றாமல்
காளிங்க நடனன் காக்க

தவறிடு பக்க வாதம்
　　தசைநரம் பிழுநோ யின்றித்
தவமுடை யோர்க ளேத்தும்
　　சக்கரத் தாழ்வார் காக்க.

அம்மைகண் ணோய்கி ரந்தி
　　அழற்படு சரும ரோகம்
விம்முறு புற்று ரோக
　　வியாதிகள் அணுகா வண்ணம்
வெம்முலை யுண்டு பேயை
　　வீழ்த்திய வீரன் காக்க
செம்மலர்ச் செல்வி பாகன்
　　சீவயந் திரத்தைக் காக்க.

பன்னகம் செய்யான், பூரான்
　　பாய்புலி முகச் சிலந்தி
முன்னிடு தேள்கொ டுக்கன்
　　முதலிய விஷங்க ளாலே
இன்னலுற் றேங்கி டாமல்
　　இருமரு கிடைத வழ்ந்து
தொன்னெறிச் சாபம் தீர்த்த
　　துளசிதோய் மார்பன் காக்க

கொடும்புலி ங்கம் யானை
குத்திடும் எருமை பன்றி
கடும்சினக் கரடி செந்நாய்
காடுவாழ் மிருக வர்க்கம்
அடுமிட ரிலாமல் "கண்ணா"
அபயமென் றழைத்தா னுக்கு
நெடுநர சிங்க மாகி
நின்றருள் புரிந்தோன் காக்க.

வஞ்சசெய் வினைகள் ஆவி
வாட்டுபேய் வசைம ருந்து
வெஞ்சல மலவி யாதி
விழுவலி மயக்கம் குன்மம்
நஞ்சுபங் லாயு தம்தீ
நடுங்கிடி மின்னல் தண்ணீர்
சஞ்சல மிழையா தைந்தீர்
தலையனை யழித்தோன் காக்க.

மிஞ்சிடு கொலைகள் காமம்
வெகுளியா யினசூ ழாமல்
மஞ்சுயர் வைகுந் தத்தின்
மகாதிபன் கண்ணாற் காக்க

அஞ்சிடு கால தூதர்
அடியனை வருத்த வந்தாய்
கஞ்சனை வதைத்த வீரக்
கதாயுதன் கடிது காக்க.

பகலிராத் திசைக ளெங்கும்
பழுவிள வெறிந்தோன் காக்க
அகமுடல் வாக்கால் நீதி
அலாதன புரியா(து) ஆயர்
துகிலினைக் களவெடுத்த
சுந்தர மாயன் காக்க
இகபர சுகம்சி றக்க
இலட்சுமி காந்தன் காக்க

தனம்கலை மனைவி மக்கள்
தழுவிய சுற்றம் நட்பு
கனமிகு வளந லங்கள்
கவினுயர் ஆத னூரில்
தினமரக் கால்த லைக்கீழ்
சீரெழுத் தாணி ஓலை
நினைந்துகைக் கொண்டு றங்கும்
நீண்டகோ தண்டன் காக்க

மனைமகார் சொந்தம் வைத்த
மண்நிதி யனைய பந்த
வினையலை யாழி நீந்த
வித்தக நரகன் மாள
முனையுறு நேமி விட்ட
முதுமது சூதன் காக்க
எனதியான் இல்லாப் பண்பை
எழிற்பரிக் கல்கி காக்க.

அன்பெனும் நீர்பெ ருக்கி
அறிவெனும் பயிர்வி ளைத்துத்
துன்பஊழ்க் களைபி டுங்கிச்
சுடர்மணிக் கதிரெ டுக்க
முன்பவை தங்கை சேலை
மூடனுற் றுரிந்த வேளை
மின்பல துகில ளித்த
வேத ஸ்ரீ மூர்த்தி காக்க.

புலனைந்து பொறிக ளைந்து
பொருந்துபூ தச்ச ரீரம்
வலிவுறும் அங்க மெல்லாம்
மலைக்குடை எடுத்தோன் காக்க

கலையெல்லாம் கற்ற பேற்றால்
கசிந்துணர் அறிவைக் காணும்
நிலமையை வீணா பாணி
தெடுமாம னுதவிக் காக்க.

வாயுவோர் பத்தும் பாய்ந்து
மலருமா றாதா ரத்தில்
தோயும்ஐ யுணர்வொன் றாகிச்
சுழுமுனை நடுவெ ழுந்த
தேயுபோய்ச் சகஸ்ரா ரத்தின்
சிரவெளித் துவாத சாந்தம்
ஆயவீ டினிது றங்க
அரிய செங் குன்றோன் காக்க.

எத்தனை பிழைசெய் தாலும்
எழுநர கைத்த டுத்துத்
தத்துவ பரசு ராமத்
தயாபரன் காக்க முன்னாள்
அத்தியின் துயர்து டைத்தோன்
ஆவியின் துணையாம் பாத
முத்திரை தலைவைத் தென்னை
மும்மையும் காக்கக் காக்க.

அற்புத நடன மாடி
அசுரரை யடக்கி யாண்ட
கற்பக மேகா குத்தா
கனிந்தநின் கவசந் தன்னை
சொற்பொ ருணர்ந்து நித்தம்
தோத்திரம் புரிவார்க் கெல்லாம்
நற்பலன் நயந்து காக்க
நமோ நா ராய ணாய.

பயன்

வரப்பல னருளும் நாக
வரதநா ராய ணன்தன்
திருப்பதம் நினைந்து நித்தம்.
தீமைவா ராம லன்னான்
அருட்கவி யிவைக ளோதும்
அடியவர் சுகம்ப டைத்துக்
கருக்கடல் நீந்திக் கண்ணன்
மழல்நிழல் வாழ்வ வாரே.



அன்பளிப்பு :

# வேணி களஞ்சியம்

## 165, கே. கே. எஸ். வீதி

## யாழ்ப்பாணம்.

ஏழாலை மஹாத்மா அச்சகம், கந்தர்மடம்